பக்கங்கள்: 06

THEEMPUNAL
# தீம்புனல்

மாலைப் பதிப்பு




theempunaldaily@gmail.com | தீ : 01 | புனல்:23 | 04.12.2023 திங்கட்கிழமை | வள்ளுவர் ஆண்டு 2053

# தலைமைப் பதவிக்கு சுமந்திரன்-சிறீதரன் போட்டி





இலங்கை தமிழரசுக் கட்சியின் புதிய தலைவரைத்தெரிவு செய்வதற்காக எம்.ஏ.சுமந்திரன், சிவஞானம் சிறீதரன் ஆகியோரின் பெயர்கள் முன்மொழியப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. தமிழரசுக் கட்சியின் வரலாற்றில் தலைவர் ஏகமனதாகத் தெரிந்தெடுக்கப்படுவதே மரபு. இம்முறை இருவரின் பெயர் முன்மொழியப்பட்டதால் வாக்கெடுப்பு மூலம் புதிய தலைவரைத் தெரிவு செய்யும் நிலை உருவாகி உள்ளது.... (பக்:02)

## புத்தாண்டில் பொருட்களின் விலை உயரும்

2024 ஆம் ஆண்டில், இலங்கையில் பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகள் கணிசமான அளவில் அதிகரிக்கும் என இலங்கை வடமேற்கு பல்கலைக்கழகத்தின் பொருளாதாரம் மற்றும் புள்ளியியல் துறை பேராசிரியர் அமிந்த மெத்சிலா தெரிவித்தார்.

மறைமுக வரிகள் மூலம் 72 சதவீதம் கூடுதல் வருவாயை அரசு எதிர்பார்ப்பதே விலை உயர்வுக்குக் காரணம் ஆகும் என பேராசிரியர் குறிப்பிட் டுள்ளார்.

அடுத்த ஆண்டு பட்ஜெட் ஆவணத்தின் படி 122400 கோடி ரூபாய் (1224 பில்லியன்) கூடுதல் வருமானத்தை அரசு எதிர்பார்க்கிறது. அதில் 72 சதவீதம் வட் மற்றும் இதர கூடுதல் வரிகள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (பக்:02)

## போலி விசாக்களில் வெளிநாடு செல்வோர் தொகை அதிகரிப்பு

போலி ஆவணங்களைப் பயன்படுத்தி வெளிநாடுகளுக்குச் செல்வதற்கு முயற்சித்த 10 சம்பவங்கள் கட்டுநாயக்க விமான நிலைய குடிவரவு மற்றும் குடியகல்வு எல்லைக் கட்டுப்பாட்டுப் பிரிவின் அதிகாரிகளால் முறியடிக்கப்பட்டுள்ளன.

ஐரோப்பாவிற்கு தப்பிச் செல்லும் வடமாகாண மக்கள் டோஹா, துபாய் குடிவரவு அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டு இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். போலியான முகவர்களிடம் சிக்க வேண்டாம் என எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

போலி விசாவைப் பயன்படுத்தி இத்தாலிக்கு தப்பிச் செல்ல முயன்ற இலங்கைப் பெண்கள் இருவர், கட்டுநாயக்க விமான நிலைய குடிவரவு எல்லைக் கட்டுப்பாட்டுப் பிரிவின் அதிகாரிகள் குழுவினால் கைது செய்யப்பட்டுள்ளனர். (பக்:02)

## முச்சக்கர வண்டி கட்டணம் குறைப்பு

பெற்றோலின் விலை குறைக்கப்பட்டதன் காரணமாக முதல் கிலோமீற்றர் முச்சக்கரவண்டிக்கு கட்டணம் 90 ரூபாய் அறவிடப்படும் என இலங்கை சுயதொழில் வல்லுநர்களின் தேசிய முச்சக்கர வண்டி சங்கத்தின் தலைவர் மகிந்த குமார நேற்று தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, 100 ரூபாய் கட்டணத்தில் பயணிகள் போக்குவரத்தை ஆரம்பித்த அனைத்து முச்சக்கர வண்டிகளும் 90 ரூபாவில் பயணிக்க ஆரம்பிக்க வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

100 ரூபாயுடன் பயணத்தை ஆரம்பிக்காத முச்சக்கரவண்டிகள் தொடர்பில் கேள்வி கேட்க பயணிகளுக்கு உரிமை உண்டு எனவும், அவ்வாறான முச்சக்கர வண்டிகளை நிராகரிக்குமாறும் பயணிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார். பெற்றோல் விலை குறைக்கப்படும் போது பயணிகளுக்கு நிவாரணம் வழங்குவது இந்த நாட்டில் உள்ள ஒவ்வொரு முச்சக்கர வண்டி சாரதியின் பொறுப்பும் கடமையும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு முச்சக்கர வண்டி சாரதியும் முதல் கிலோமீற்றருக்கு 90 ரூபாவும் இரண்டாவது கிலோமீற்றருக்கு 90 ரூபாவும் பயணிகளிடம் வசூலிக்குமாறும் தலைவர் கேட்டுக் கொள்கிறார்.

# தலைமைப் பதவிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாடு அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. அந்த மாநாட்டில் கட்சியின் புதிய தலைவர் தெரிவு செய்யப்படுவார் என தெரிவிக்கப்படுகிறது. கட்சியின் மத்திய செயற்குழு கூடி புதிய தலைவரை முடிவு செய்யும் என்றும், புதிய தலைமைக்கு அதிக வேட்பு மனுக்கள் வந்தால் பொதுக் குழு கூடி புதிய தலைமையை முடிவு செய்யும் என்றும் சமீபத்தில் கூடிய மத்திய செயற்குழுவில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# புத்தாண்டில் பொருட்களின் விலை

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொருட்கள் மற்றும் சேவைகளுக்கு வரி விதிக்கப்படும் போது, வணிகர்கள் வாடிக்கையாளரிடமிருந்து வரியை முழுமையாக வசூலிக்க முயற்சிப்பார்கள். அதன்படி, இந்த 72 சதவீத மறைமுக வரி நுகர்வோர் மீது செலுத்தப்படுவது தவிர்க்க முடியாதது என பேராசிரியர் தெரிவித்துள்ளார். அரிசி, மா, சர்க்கரை, பருப்பு, உருளைக்கிழங்கு, வெங்காயம் போன்ற அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை 72 சதவீதம் உயரும்.

பொது மக்களின் வாழ்க்கைத்தரம் குறைந்து பணவீக்கம் அதிகரிக்கும் என பேராசிரியர் அமிந்த மெத்சிலா மேலும் தெரிவித்தார்.

# போலி விஸாக்களில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவர்களில் ஒருவர் கிளிநொச்சி பகுதியைச் சேர்ந்தவர் எனவும் மற்றையவர் வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவர் எனவும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். விமானப் போக்குவரத்து அனுமதிக்காக அவர்கள் சமர்ப்பித்த ஆவணங்களில் சந்தேகம் அடைந்த கட்டார் ஏர்வேஸ் அதிகாரிகள் இருவரையும் விமான நிலையத்தின் குடிவரவு மற்றும் எல்லைக் கட்டுப்பாட்டுப் பிரிவு அதிகாரிகளுக்கு அனுப்ப நடவடிக்கை எடுத்துள்ளனர். இத்தாலி விஸாக்கள் பொய்யான தகவல்களைக் கொண்டு போலியாக தயாரிக்கப்பட்டது என்பது விசாரணையில் தெரிய வந்ததால் அவர்கள் கைது செய்யப்பட்டனர்.

# ஆர்ப்பாட்டத்தை கலைக்க நீர்த்தாரை பிரயோகம்



பாராளுமன்ற சுற்றுவட்டம் அருகே தேசிய மக்கள் சக்தியின் பெண்கள் அமைப்பினர் பல கோரிக்கைகளை முன்வைத்து நடத்திய போராட்டத்தை கலைக்க பொலிஸார் நீர்த்தாரை பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.



# கடும் மழையால் மண்சரிவு அபாயம்



மேல் மாகாணம், சப்ரகமுவ மாகாணம், மத்திய மாகாணம், தென் மாகாணம், வடமாகாணம், வடமேற்கு மாகாணங்களில் 100 மில்லி மீற்றருக்கும் அதிகமான பலத்த மழை பெய்யும் என வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது. தென்மேற்கு வங்காள விரிகுடா கடற்பகுதியில் வலுவடைந்த மிக்ஜாம் சூறாவளி நிலையால், தென்மேற்கு பகுதியில் மழை நீடிக்கும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. வடக்கு கடலோரப் பகுதிகள் மற்றும் வங்காள விரிகுடாவின் ஆழ்கடல் பகுதிகளில் மீன் பிடிக்கச் செல்ல வேண்டாம் என வளிமண்டளவியல்திணைக்களம் அறிவித்துள்ளது. கண்டி, களுத்துறை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# 5 நாட்கள் உணவுக்கு 11 இலட்சம் ரூபா செலவு

2022 ஆம் ஆண்டில் பாதுகாப்பு சேவை கட்டளை மற்றும் பணியாளர் கல்லூரிக்குச் சென்று வந்த இராணுவத் தளபதிகள் குழு, உணவிற்காக, ஐந்து நாட்களுக்கு பதினொரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாவை செலவிட்டுள்ளதாக தேசிய கணக்காய்வு அலுவலகம் வெளியிட்டுள்ள சமீபத்திய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பொருளாதார நெருக்கடி காரணமாக செலவீனங்களைக் கட்டுப்படுத்துவதற்காக திறைசேரி விடுத்துள்ள சுற்றறிக்கைக்கு முரணாக இந்தத் தொகை செலவிடப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்லூரியின் பணியாளர், விவகாரங்களை ஆய்வு செய்ய சென்ற பாதுகாப்பு செயலாளர், பாதுகாப்பு அதிகாரி, முப்படைத் தளபதிகளுக்கே இவ்வாறு செலவிடப்பட்டுள்ளதாக தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# பணிப்பாளர் சபை உறுப்பினராக அறூஸ் நியமனம்

அட்டாளைச்சேனை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் பணிப்பாளர் சபைஉறுப்பினராக தேசிய ஐக்கிய ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவரும், சிரேஷ்ட ஊடகவியலாளருமான எஸ்.எம்.அறூஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

கிழக்கு மாகாண ஆளுநரின் விஷேட அறிவுறுத்தலுக்கமைவாக, கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருமான என்.மதிவண்ணனினால் இவருக்கான நியமனக்கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

சிரேஷ்ட ஊடகவியலா



ளர் எஸ்எம்அறூஸ் அவரின் நியமனக் கடிதத்தை அட்டாளைச்சேனை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் பொது முகாமையாளர் எஸ்.எல்.முனவ்வரிடம் இன்று (04) கையளித்தார்.

இந்நிகழ்வில் தேசிய ஐக்கிய ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தவிசாளரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான ஏ.எல்.றமீஸ், அக்கரைப்பற்று பிரதேச சபையின் பிரதம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எல்.கியாஸ்தீன், ஆர்.கே.எஸ். ஊடக வலையமைப்பின் பணிப்பாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# காங்கேசன்துறையில் இராணுவ அங்கிகள் மீட்பு



கடந்த 33 வருடங்களாக இராணுவக் கட்டுப்பாடிலிருந்து விடுவிக்கப்பட்ட காணி ஒன்றினை அதன் உரிமையாளர் துப்பரவு செய்து கிணற்றினை இறைத்த போது கிணற்றினுள் இருந்து பெருமளவான இராணுவ அங்கிகள் மீட்கப்பட்டுள்ளன. அது தொடர்பில்இராணுவத்தினருக்கு அறிவித்ததையடுத்து இராணுவத்தினர் அவற்றை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இராணுவ கட்டுப்பாட்டில் இருந்து அண்மையில் விடுவிக்கப்பட்ட காங்கேசன்துறை - மாங்கொல்லை பகுதியில் பெருமளவான இராணுவ அங்கிகள் (குலக் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

# தான்சானியாவில் 47 பேர் பலி 85 பேர் காயம்

வடக்கு தான்சானியாவில், வெள்ளப் பெருக்கினால் ஏற்பட்ட நிலச்சரிவில் குறைந்தது 47 பேர் பலியானதாகவும் 85 பேர் காயமடைந்ததாகவும் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.



தலைநகர் டோடோமாவிற்கு வடக்கே 300 கி.மீ (186 மைல்) தொலைவில் உள்ள கடேஷ் நகரத்தில் சனிக்கிழமையன்று கனமழை பெய்தது என்று மாவட்ட ஆணையர் ஜனேத் மயஞ்சா ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தார். "மாலை வரை, இறப்பு எண்ணிக்கை 47 ஐ எட்டியது மற்றும் 85 பேர் காயமடைந்தனர்" என்று வடக்கு தான்சானியாவின் மன்யாரா பகுதியிலுள்ள பிராந்திய ஆணையர் ராணி சென்டிகா உள்ளூர் ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

பலி எண்ணிக்கை அதிகரிக்க வாய்ப்புள்ளதாக இருவரும் எச்சரித்துள்ளனர்.

# ஹவாய் ஏர்லைன்ஸை வாங்குகிறது அலஸ்கா ஏர்லைன்ஸ்

ஹவாய் ஏர்லைன்ஸை கடன் உட்பட $1.9 பில்லியன் ஒப்பந்தத்தில் வாங்க அலஸ்கா ஏர்லைன்ஸ் ஒப்




புக்கொண்டதாகக் கூறியது இது தொழில்துறையில் அதிக கட்டணங்கள் குறித்து எச்சரிக்கையைக் காட்டிய பைடன் நிர்வாகத்துடன் சாத்தியமான மோதலுக்கான பாதையில் வைக்கிறது.

ஒருங்கிணைந்த நிறுவனம், நாட்டின் 49 ஆவது மற்றும் 50 ஆவது மாநிலங்களில் வேரூன்றிய இரண்டு விமான நிறுவனங்களின் பிராண்டுகளையும் வைத்திருக்கும். அலஸ்கா ஹவாயின் ஒவ்வொரு பங்கிற்கும் $18 ரொக்கமாக செலுத்தும், அதன் பங்கு வெள்ளியன்று $4.86 இல் முடிவடைந்தது.

இந்த ஒப்பந்தத்தில் ஹவாய் ஏர்லைன்ஸ் கடனில் $900 மில்லியன் அடங்கும், இது கையகப்படுத்தலின் மொத்த மதிப்பை $1.9bn ஆகக் கொண்டு வருவதாக விமான நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

# செங்கடலில் கப்பல்கள் மீது தாக்குதல்

செங்கடலில் யு.எஸ்.எஸ் கார்னி போர்க்கப்பல்மீதும் பல வணிகக் கப்பல்கள் மீதும் ஞாயிற்றுக்கிழமை ட்ரோன் தாக்குதல் நடைபெற்றதாக பென்டகன் கூறியது.

இது இஸ்ரேல்-ஹமாஸ் போருடன் தொடர்புடைய மத்திய கிழக்கில் தொடர்ச்சியான கடல் தாக்குதல்களில் ஒரு பெரிய விரிவாக்கத்தைக் குறிக்கும் எனவும் தாக்குதல்கள் தொடர்பான விரிவான அறிக்கைகளை நாங்கள் அறிவோம், அது கிடைக்கும்போது தகவலை வழங்குவோம் என்றும் பென்டகன் கூறியது.

# எகிப்தின் இம்ஹோடெப் அருங்காட்சியகம் மீண்டும் திறக்கப்பட்டது

எகிப்திய தலைநகர் கெய்ரோவின் தெற்கே உள்ள சக்காரா நெக்ரோபோலிஸில் புதிதாகப் புதுப்பிக்கப்பட்ட இம்ஹோடெப் அருங்காட்சியகம் ஞாயிற்றுக்கிழமை மீண்டும் திறக்கப்பட்டது.

எகிப்தின் மூன்றாவது வம்சத்தின் இரண்டாவது மன்னரான ஜோசரின் கட்டடக் கலைஞரும் அமைச்சருமான இம்ஹோடெப்பின் பெயரிடப்பட்ட இந்த அருங்காட்சியகத்தில் ஆறு அரங்குகளில் 286 கலைப்பொருட்கள் உள்ளன, கூடுதலாக 70 கலைப்பொருட்கள் தற்காலிக காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

சுமார் 1,500 சதுர மீற்றர் பரப்பளவில் அமைந்துள்ள இந்த அருங்காட்சியகம் 2006 இல் திறக்கப்பட்டது, இது மார்ச் 2022 இல் எகிப்தின் பழங்காலங்களின் உச்ச கவுன்சிலால் புதுப்பிக்கும் பணிக்காக மூடப்பட்டது.

# ஹமாஸ் தலைவர்களைக் கொல்ல இஸ்ரேல் திட்டம்

பாலஸ்தீனத்தின் ஹமாஸ் தீவிரவாதிகளுக்கு எதிரான போர் முடிந்த பிறகு, இஸ்ரேல் முன்னாள் பிரதமர் கோல்டா மீரின் வழியைப் பின்பற்ற இப்போதைய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு விரும்புவதாகக் கூறப்படுகிறது. இதன்படி, இஸ்ரேல் எதிரிகள் (ஹமாஸ் தலைவர்கள்) எந்த நாட்டில், எக்கண்டத்தில் இருந்தாலும் தேடிக் கண்டுபிடித்து கொலை செய்ய 'ஆபரேஷன் ராத் ஆப் காட்' போன்ற திட்டத்துக்கு ஒப்புதல் அளிக்கவும் திட்டமிட்டுள்ளதாக தெரிகிறது.

துருக்கி, லெபனான் மற்றும் கட்டாரிலுள்ள ஹமாஸ் தலைவர்களை ஒழிப்பதற்கான திட்டத்தை இஸ்ரேலின் உளவு அமைப்பான மொசாட் வகுத்து வருவதாகக் கூறப்படுகிறது.

மொசாட் உளவு அமைப்பு தயாரித்துள்ள பட்டியலில், இஸ்மாயில் ஹனியே, முகம்மது டெய்பி, யாயா சின்வார் மற்றும் காலித் மஷால் உள்ளிட்டோர் இடம்பெற்றுள்ளதாகக் கூறப்படுகிறது.

# மராபி எரிமலை வெடித்ததால், சாம்பலால் மூடப்பட்ட நகரங்கள்

இந்தோனேசியாவின் மேற்கு சுமத்ரா மாகாணத்திலுள்ள மராபி எரிமலை ஞாயிற்றுக்கிழமை வெடித்து, எரிமலை சாம்பலை 3,000 மீற்றர் (9,843 அடி) காற்றில் கக்கியது என நாட்டின் பேரிடர் மேலாண்மை நிறுவனம் தெரிவித்துள்ளது.

"2,981 மீற்றர் எரிமலை உள்ளூர் நேரப்படி மதியம் 2.54 மணிக்கு வெடித்து, எரிமலை சாம்பலை அண்டை மாவட்டங்களுக்கு அதிக தீவிரத்துடன் வீசுகிறது" என படன் நேஷனல் பெனாங்குளங்கன் பென்கானா (BNPB) அதிகாரிகள் தெரிவித்தனர்.

சாலைகள் மற்றும் வீடுகள் சாம்பலால் மூடப்பட்டுள்ள புகைப்படங்கள், தற்போது வைரலாகி வருகிறது.

எரிமலையை சுற்றி 3 கிலோமீற்றர் தொலைவிற்கு அனைத்து செயல்பாடுகளையும் தடை செய்துள்ள அதிகாரிகள், இரண்டாவது மிக உயர்ந்த எச்சரிக்கை நிலையை பிரகடனப்படுத்தியுள்ளனர்.

பொதுமக்களுக்கு முகக்கவசங்கள் விநியோகிக்கப்பட்டு, அவர்கள் வீடுகளுக்குள் இருக்க அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

# காஸா மோதலை நிறுத்துமாறு ஐரோப்பிய ஒன்றியம் கோரிக்கை

காஸா பகுதியில் நிலவும் மோதலை விரைவில் முடிவுக்கு கொண்டுவர வேண்டியதன் அவசியத்தை ஈரான் வெளியுறவு அமைச்சர் ஹொசைன் அமீர் அப்துல்லாஹியன், ஐரோப்பிய ஒன்றிய வெளியுறவுக் கொள்கை தலைவர் ஜோசப் பொரெல் ஆகியோர் எடுத்துரைத்தனர்.

ஞாயிற்றுக்கிழமை ஈரானிய வெளியுறவு அமைச்சகத்தின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்ட அறிக்கையின்படி, சனிக்கிழமையன்று ஒரு தொலைபேசி அழைப்பில், இரு தரப்பினரும் காஸாவின் சமீபத்திய முன்னேற்றங்கள் மற்றும் ஈரானுக்கும் சர்வதேச அணுசக்தி முகாமைக்கும் (IAEA) இடையிலான ஒத்துழைப்பு குறித்து விவாதித்தனர்.

பாலஸ்தீனியர்களுக்கு எதிரான இஸ்ரேலிய "குற்றங்களை" நிறுத்த வேண்டியதன் அவசியத்தை ஈரானிய வெளியுறவு அமைச்சர் வலியுறுத்தினார், காஸாவில் உள்ள மக்களுக்கு எதிரான இஸ்ரேலின் இராணுவத் தாக்குதல்களை உடனடியாக முடிவுக்குக் கொண்டு வருவது மற்றும் கடலோரப் பகுதிகளுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கான களத்தை தயார் செய்வது அவசியம் என்று குறிப்பிட்டார்.

காஸா பகுதி மற்றும் மேற்குக் கரையில் உள்ள பதட்டங்களை விரைவில் குறைக்க வேண்டியதன் அவசியத்தை ஐரோப்பிய ஒன்றிய வெளியுறவுக் கொள்கைத் தலைவர் தெரிவித்தார்.

"அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்"

கனகசபை கட்டடத் தொகுதி,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 07 05
www.theempunal.com
theempunaldaily@gmail.com

தீம்புனல் THEEMPUNAL

## ஆதரவுக்காக ஏங்கும் குழந்தைகளின்

# தொகை அதிகரிப்பு

குழந்தை சுகாதாரம், கல்வி ஆகிய துறைகளில் கடந்த தசாப்தத்தில் இலங்கை அடைந்த வளர்ச்சியை மாற்றியமைத்த கொவிட்-19 மற்றும் பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட குழந்தைகள், இளைஞர்கள் மற்றும் குடும்பங்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதே தற்போது நாம் எதிர்கொள்ளும் மிகப்பெரிய சவாலாகும். திறன்மேம்பாடு மற்றும் பாதுகாப்பு. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் 2022 இல் நடத்திய அவசர விரைவு மதிப்பீட்டின்படி, 2.3 மில்லியன் குழந்தைகளுக்கு, அதாவது இலங்கையிலுள்ள மொத்த குழந்தைகளில் கிட்டத்தட்ட பாதி பேருக்கு மனிதாபிமான ஆதரவு தேவைப்படுகிறது. நன்னடத்தை திணைக்களம், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் கூற்றுப்படி, சிறுவர் துஷ்பிரயோக வழக்குகள் அதிகரித்து வருவதோடு, அதிக மன அழுத்தத்தின் விளைவாக எதிர்மறையாக சமாளிக்கும் பொறிமுறையாக பெற்றோர்களால் குழந்தைகளுக்கு உடல் ரீதியான தண்டனைகள் அதிகரித்து வருகின்றன.

மேலும் குழந்தைகளை அரசு அநாதை இல்லங்களில் சேர்க்க முடியாமல் அவநம்பிக்கையான பெற்றோரால் சேர்க்கப்படுகின்றனர் 80% குழந்தைகள் மற்றும் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகள் பாதுகாப்பாக இல்லை என்று உணர்கிறார்கள், இது கொவிட்க்கு முந்தைய காலங்களில் 20% ஆக இருந்தது. பாலியல் துஷ்பிரயோகம், உடல் ரீதியான தாக்குதல்கள், புறக்கணிப்பு மற்றும் ஆன்லைன் வன்முறை போன்ற கடுமையான குழந்தைப் பாதுகாப்பு பாதிப்புகளுக்கு குழந்தைகள் அதிகளவில் ஆளாகின்றனர். எல்லாவற்றிற்கும் மேலாக, குழந்தைகள் மற்றும் இளைஞர் மேம்பாட்டுக்காக ஒதுக்கப்பட்ட தேசிய வளங்கள் கீழ்நோக்கிய போக்கைக் கண்டுள்ளன.

ஊட்டச்சத்துக் குறைபாட்டிலிருந்து குழந்தைகளைப் பாதுகாப்பது, குழந்தைகளை மீண்டும் பள்ளிக்குக் கொண்டுவருவது, நெருக்கடியின் போது டிஜிட்டல் தொழில்நுட்பங்கள் மற்றும் பிற வளங்கள் இல்லாததால் பள்ளிப் படிப்பை நிறுத்த வேண்டிய குழந்தைகளின் திறன்களை மேம்படுத்துவது ஆகியவை மிகவும் உதவி தேவைப்படும் பகுதிகளாகும். இளைஞர்கள் தங்களுக்கு விருப்பமான தொழிலைத் தேர்ந்தெடுப்பதற்கு தொழில்முறை மற்றும் தொழில் முனைவோர் திறன்களை வளர்த்துக் கொள்ள உதவுதல் மற்றும் கடைசியாக, குழந்தைகள் மற்றும் இளைஞர்களை மிகவும் பாதிக்கும் காலநிலை நெருக்கடிக்கு பதிலளிப்பது.

இலங்கையில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடியின் பின்னணியில், கொவிட் தொற்றுநோயால் சூடுபிடித்து, மீண்டும் மீண்டும் பள்ளிகள் மூடப்படுவதால், இலங்கையில் குழந்தைகளுக்கு ஏற்படும் பாதிப்பை எப்படி விவரிப்பீர்கள்?

இலங்கையில், கொவிட் 9 தொற்றுநோயால் குழந்தைகள் விகிதாசாரத்தில் பாதிக்கப்பட்டுள்ளனர், ஆனால் உயர்நிலைப் பள்ளி இடைநிற்றல் விகிதத்திற்கு வழிவகுத்த பொருளாதார நெருக்கடியால் நிலைமை சிக்கலானது.

2022 ஆம் ஆண்டில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் நடத்திய அவசர விரைவு மதிப்பீட்டின்படி, கணக்கெடுக்கப்பட்ட 10 (11%) குடும்பங்களில் ஒருவர் தங்கள் வீட்டுத் தேவைகள் பூர்த்தி செய்யப்படாவிட்டால், தங்கள் குழந்தைகள் பள்ளியை விட்டு வெளியேறுவார்கள் என்று ஒப்புக்கொண்டனர். தோட்டங்களில், இந்த எண்ணிக்கை 24% ஆக இருந்தது.

இதற்கிடையில், 66% குழந்தைகள் மார்ச் மற்றும் மே 2022 க்கு இடையில் தினசரி பள்ளி வருகையில் 80% க்கும் குறைவாக இருப்பதாகவும் 77% குழந்தைகள் தொடர்ச்சியான மின்சாரத் தடைகள், போக்குவரத்து பிரச்சினைகள் மற்றும் பெற்றோர்கள் இல்லாததால் பள்ளிக்குப் பிந்தைய கல்வி நேரத்தைக் குறைத்துள்ளதாக தெரிவித்தனர். கூடுதல் வகுப்புகள், எழுதுபொருட்கள் மற்றும் பள்ளி உணவு ஆகியவற்றின் அதிக விலையை தாங்கிக்கொள்ள முடியும்.

கல்வி முறையை வலுப்படுத்துவதன் மூலமும் மாணவர்களை அறிவுரீதியாகவும் ஆன்மீக ரீதியாகவும் உணர்வு ரீதியாகவும் அபிவிருத்தி செய்ய அனுமதிப்பதன் மூலம், இலங்கையின் வளர்ச்சிக் கதைக்கு பங்களிக்கக்கூடிய முழுமையான குடிமக்களை உருவாக்கமுடியும். மேலும் குழந்தைகளின் அறிவாற்றல் மற்றும் சமூக-உணர்ச்சி திறன்களை மேம்படுத்துவதற்கும் அவர்களை எதிர்காலத்திற்கு தயார்படுத்துவதற்கும் வேலை செய்யும் உலகத்திற்கு அவர்களைத் தயார்படுத்துவதற்கும் தேவையான அடிப்படைத் திறன்களை மேம்படுத்துவதற்கு ஏற்ற பள்ளிப் பாடத்திட்டம் மிக அவசியம். பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்புவதில் அதிக பெற்றோர் அக்கறை காட்டுவதில்லை. குழந்தைகள் பற்றிய விழிப்புணர்வு போதுமானதாக இல்லை. அதனை அதிகரிப்பதற்குரிய வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட வேண்டும்.

# ஊர்காவற்துறை கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா

ஊர்காவற்துறை புனித அந்தோனியார் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா கடந்த புதன்கிழமை (29) கல்லூரியின் அதிபர் அருட் திரு.எம்.அன்ரன் அமலதாஸ் அவர்களது தலைமையில் நடைபெற்ற

பிரதமவிருந்தினராக யாழ்ப்பாண மறை மாவட்ட குரு முதல்வர் அருட்கலாநிதி பி.ஜே. ஜெபரட்ணம் அவர்களும் சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண மின்சார சபையின் பிரதம பொறியியலாளர் ஜேசுதாசன் அமலேந்திரன், கௌரவ விருந்தினராக தீவக கல்வி வலயத்தின் கல்வி முகாமைத்துவ பிரதிக்கல்விப் பணிப்பாளரும் கலந்து சிறப்பித்தனர்.







## ஸ்ரீ ஜயவர்தனபுர முகாமைத்துவ பீடம் இன்று மீண்டும் திறப்பு




தற்காலிகமாக மூடப்பட்ட ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ பீடம் இன்று (04) மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.

பகிடிவதை தொடர்பான சம்பவத்தின் அடிப்படையில் 6 மாணவர்களின் வகுப்புகளுக்கு தடைவிதிக்க நிர்வாகம் நடவடிக்கை எடுத்தது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கடந்த மாதம் 20 ஆம் திகதி மாணவர்கள் முகாமைத்துவ பீட பீடாதிபதியின் உத்தியோகபூர்வ அலுவலகத்திற்கு முன்பாக போராட்டம் நடத்தியதையடுத்து குறித்த பீடம் தற்காலிகமாக மூடப்பட்டது.

## மீதொட்டமுல்ல குப்பை மேடு மீண்டும் சரியும் அபாயம்

மீதொட்டமுல்ல குப்பை மேட்டை அண்மித்த பகுதியில் "மேகத் தோட்டம்" உட்பட 3400 மில்லியன் ரூபா பெறுமதியான அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்த நகர அபிவிருத்தி அதிகார சபை திட்டமிட்டுள்ளது. ஆனால் இதுவரை அதற்கான பணிகளை மேற்கொள்ள முதலீட்டாளர் முன்வரவில்லை என தெரியவந்துள்ளது.



மீதொட்டமுல்ல குப்பை மேடு 2017 ஆம் ஆண்டு சட்டவிரோத கழிவுகளை அகற்றியதால் குப்பை மேடானது சரிந்து விழுந்தது. இதன் விளைவாக, பதினொரு பேர் காணாமல் போயினர், மேலும் முப்பத்திரண்டு பேர் உயிரிழந்தனர். எட்டு ஹெக்டேர் பரப்பளவில் பரவியுள்ள இந்தக் குப்பைக்கிடங்கு 48 மீற்றர் உயரமாகும்.

இக்குப்பை மேட்டை உரிய முறையில் பயன்படுத்தாமையால் மீண்டும் சரிந்து விழும் அபாயம் ஏற்படலாம் எனவும் கொழும்பு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவில் கலந்துரையாடப்பட்டது.

## தேர்தலை அறிவிக்கும் உரிமை ஜனாதிபதிக்கு கிடையாது - முஜிபுர்

மக்கள் ஆணையற்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்



தையோ நீதிமன்றத்தையோ மதிப்பதில்லை என்றும் இடைக்கால ஜனாதிபதியொருவருக்கு இவ்வாறு தன்னிச்சையாக செயற்பட அதிகாரம் இல்லை என்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று (03) நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவிக்கையில், அரசியலமைப்பு பேரவை சார் செயற்பாடுகளில் சபாநாயகர் பக்க சார்பாகவே செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார். பாராளுமன்றத்தில்கூட நியாயம் நிலைநாட்டப்படாத போது, நாட்டில் எவ்வாறு மக்களுக்கு நியாயம் வழங்கப்படும்? ஜனாதிபதியும் ஜனாதிபதியின் சகாக்களும் பாராளுமன்றத்தையோ சட்டத்துறையையோ மதிப்பதில்லை. விக்கிரமசிங்க - ராஜபக்ஷ ஆட்சி மக்கள் மத்தியில் நம்பிக்கையின்மையை ஏற்படுத்தியுள்ளது.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் தொடர்பான வழக்கு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், அடுத்த வருடம் ஜனாதிபதித் தேர்தலும் பொதுத் தேர்தலும் இடம்பெறும் என்று ஜனாதிபதி அறிவிக்கின்றார்.

ஜனாதிபதி பதவிக்கு அப்பால் தேர்தல் ஆணையாளராகவும் அவர் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார். தேர்தல் தொடர்பில் அறிவிக்கும் உரிமை ஜனாதிபதிக்கு கிடையாது என்றார்.

## திரிபோஷ வரி அதிகரிப்பிற்கு எதிர்ப்பு

குழந்தைகள் கர்ப்பிணித் தாய்மார்களின் போசாக்கு நிலையை மேம்படுத்தும் வகையில் வழங்கப்படும் திரிபோஷ வரி அதிகரிப்பை நடைமுறைப்படுத்துவது நியாயமற்றது. எனவே, தனது தயாரிப்புகளுக்கான மூலப்பொருட்களை வாங்கும் போது பதிவு செய்யப்பட்ட சப்ளையர்களுக்கு 15% வட் செலுத்துகிறது, என பேருவளையில் நேற்று (03) நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்ட ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.




## தெஹியத்தகண்டி வைத்தியசாலையில் சத்திரசிகிச்சை நிபுணர் இல்லை

தெஹியத்தகண்டி ஆதார வைத்தியசாலையில் கடமையாற்றிய ஒரேயொரு சத்திரசிகிச்சை நிபுணர் நாட்டை விட்டு வெளியேறியதால், சகல சத்திரசிகிச்சைகளும் ஸ்தம்பிதமடைந்துள்ளதாகவும் தெஹியத்தகண்டி ஆதார வைத்தியசாலை நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளதாகவும் வைத்தியசாலைப் பணிப்பாளரால் அவசர அறுவை சிகிச்சை உட்பட 50 அறுவை சிகிச்சைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் பொலநறுவை வைத்தியசாலை உட்பட அருகாமையிலுள்ள வைத்தியசாலைகளுக்கு நோயாளர்கள் அனுப்பப்பட்ட போதிலும், அந்த வைத்தியசாலைகளில் நிலவும் நெரிசல் காரணமாக நோயாளர்கள் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர். எனவே, மருத்துவமனைப் பணிப்பாளர், அதிகாரிகள் உடனடி நடவடிக்கை எடுத்து இந்த நெருக்கடியான சூழ்நிலைக்கு தீர்வு காணவேண்டும் என்று கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

## கொழும்பு கிழக்கு கொள்கலன் முனையம் அடுத்த வருட நடுப்பகுதிக்குள் பூர்த்தியாகும்

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு கொள்கலன் முனையத்தின் (VCT) கட்டுமானப் பணிகள் அடுத்த ஆண்டு நடுப்பகுதியில் நிறைவடைந்து செயல்பாடுகளைத் தொடங்கவுள்ளது என துறைமுகங்கள், கப்பல் மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா கூறியுள்ளார்.

இந்த டெர்மினலுக்காக திட்டமிடப்பட்ட ஜெட்டி 1,400 மீற்றர்ர் நீளமாக இருக்கும் என்று அமைச்சகம் கூறியது, இது மூன்று மெகா கப்பல்களை ஒரே நேரத்தில் நிறுத்த அனுமதிக்கும்.

இந்த முனையத்தின் நிர்மாணப் பகுதிக்கு விசேட ஆய்வுகளை மேற்கொண்ட துறைமுகங்கள், கப்பல் மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, இலங்கை துறைமுக அதிகாரசபையின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் இந்த முனையத்தின் அபிவிருத்திக்காக மொத்தம் 585 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். சீனா இன்ஜினியரிங் மற்றும் அக்சஸ் இன்ஜினியரிங் ஆகியவை கட்டுமான ஒப்பந்ததாரர்களாக நியமிக்கப்பட்டுள்ளன, என்றார்.

# புவனேஸ்வர் குமாரை புறக்கணிக்கக்கூடாது : ஆஷிஷ் நெஹ்றா

இந்திய கிரிக்கெட் அணியின் தற்போதைய கட்டமைப்பில் வேகப்பந்து வீச்சாளர் புவனேஸ்வர் குமார் தேர்வுக்குழுவின் ஆதரவை இழந்து அணியில் முழுமையாக புறக்கணிக்கப்பட்டுள்ளார்.

கடைசியாக நவம்பர் 2022 இல் இந்தியாவுக்காக விளையாடிய வலது கை வேகப்பந்து வீச்சாளரான புவனேஸ்வர் குமார், அதன் பின்னர் விளையாடவில்லை இருப்பினும், ரி20 போன்ற குறுகிய வடிவிலான ஆட்டத்தில் ஒரு தாக்கமான பந்துவீச்சாளராகஇருந்துள்ளார். முன்னதாக செப்ரெம்பரில் நடந்த ரி20 இன்தொடக்கப் பதிப்பில், புவனேஸ்வர் 9 போட்டிகளில்14 விக்கெட்டுகளை வீழ்த்தி அதிக விக்கெட்டுகளை வீழ்த்தியவர்களில் முதலிடம் பிடித்தார். மேலும், அவர் சையத் முஷ்டாக் அலி டிராபி 2023 இல் 7 போட்டிகளில்விளையாடி 16 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

தென்னாபிரிக்கா கிரிக்கெட் அணிக்கு எதிராக ஒருநாள், டெஸ்ட், ரி20 போட்டிகளில் இந்தியா விளையாட உள்ள நிலையில் இந்த தொடரில் புவனேஸ்வர் குமார் தேர்வு செய்யப்படுவார் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், பி.சி.சி.ஐ அவரை தவிர்த்துவிட்டு, இளம் வீரர்களுக்கு அணியில் வாய்ப்பு கொடுத்துள்ளது. இந்நிலையில், இந்திய அணியின் முன்னாள்தலைவர்ஆஷிஷ் நெஹ்றா, தென்னாபிரிக்காவுக்கான வரவிருக்கும் பயணத்திற்கு புவனேஸ்வரை தேர்வாளர்கள் புறக்கணித்தது குறித்து தனது கவலையை எழுப்பியுள்ளார். சுற்றுப்பயணத்திற்கான தேர்வில் தான் ஆச்சரியப்படவில்லை என்றாலும் புவனேஸ்வர் மீதும் தேர்வுக்குழுவினர் ஒரு கண் வைத்திருக்க வேண்டும் என்றும் கூறினார்.




# ஒரு வருடத்தின் பின்னர் களம் இறங்குகிறர் நடால்



22 முறை கிராண்ட்ஸ்லாம் சாம்பியனான ரஃபேல் நடால், அவுஸ்திரேலியாவில் உள்ள பிரிஸ்பேன் சர்வதேசப் போட்டியில் விளையாடப் போவதாக வெள்ளிக்கிழமை தெரிவித்தார்.

**பட உதவி: AP**

22 முறை கிராண்ட்ஸ்லாம் சாம்பியனான ரஃபேல் நடால், அவுஸ்திரேலியாவில் உள்ள பிரிஸ்பேன் சர்வதேசப் போட்டியில் விளையாடத் திரும்புவார் என்று வெள்ளிக் கிழமை தெரிவித்தார்.

“ஒரு வருடத்திற்குப் பிறகு போட்டியிடாததால், மீண்டும் வருவதற்கான நேரம் இது” என்று நடால் சமூக ஊடகங்களில் வெளியிடப்பட்ட வீடியோவில் கூறினார். “இது ஜனவரி முதல் வாரத்தில் பிரிஸ்பேனில் இருக்கும். அங்கே பார்க்கலாம்.”

37 வயதான நடால் கடந்த ஜனவரியில் இருந்து சுற்றுப்பயணத்தில் விளையாடவில்லை. அவுஸ்திரேலிய ஓபனின் இரண்டாவது சுற்றில் தோல்வியின் போது அவரது இடுப்பில் காயம் ஏற்பட்டது.

2024 ஆம் ஆண்டில் போட்டியிடப் போவதாகவும் அது தனது இறுதி போட்டியாக இருக்கும் என்றும் அவர் கூறினார்.

22 கிராண்ட்ஸ்லாம் ஒற்றையர் பட்டங்கள் வென்ற நடால், ஆண்களில் அதிக பட்டங்கள் வென்ற நோவக் ஜோகோவிச்சின் 24 பட்டங்களுக்கு அடுத்தபடியாக இரண்டாவது இடத்தில் உளது. ஜூன் மாதம் பார்சிலோனாவில்ஆர்த்ரோஸ்கோபிக் அறுவை சிகிச்சை செய்துகொண்டார்.

# அதிக ஓட்டங்களைக் கொடுத்த இங்கிலாந்து வீரர்

இங்கிலாந்தின் ரி20 நட்சத்திரமான சாம் குர்ரன், ஞாயிற்றுக்கிழமை ஆன்டிகுவாவின் நார்த் சவுண்டில் உள்ள சர்விவியன் ரிச்சர்ட்ஸ் ஸ்டேடியத்தில் மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான முதல் ஒருநாள் சர்வதேசப் போட்டியில் 9.5 ஓவர்களில் 98 ஓட்டங்களை விட்டுக்கொடுத்தார். 2006 ஆம் ஆண்டு இலங்கைக்கு எதிராக ஸ்டீவ் ஹார்மிசன் 10 ஓவர்களில் 97 ஓட்டங்களை விட்டுக் கொடுத்ததே இது வரை அதிகமானதாக இருந்தது.

ஒருநாள் போட்டிகளில் அதிக ஓட்டங்களை விட்டுக்கொடுத்த இங்கிலாந்து பந்துவீச்சாளர்

**சாம் குர்ரன்** (9.5 ஓவர்களில் 98 ஓட்டங்கள்) மேற்கு இந்தியாவுக்கு எதிராக 2023 ஆம் ஆண்டு **ஆன்டிகுவா ஸ்டீவ் ஹார்மிசன்**

(10 ஓவர்களில் 97 ரன்கள்) இலங் கைக்கு எதிராக 2006 இல் லீட்ஸ்

**கிறிஸ் ஜோர்டான்** (9 ஓவர்களில் 97 ஓட்டங்கள்) நியூஸிலாந்துக்கு எதிராக 2015 ஆம் ஆண்டு ஓவல் மைதானம்

**ஜேக் பால்** (10 ஓவர்களில் 94 ஓட்டங்கள்) மேற்கு இந்தியாவுக்கு எதிராக 2017 சவுத்தாம்ப்டன்

**ஜேம்ஸ் ஆண்டர்சன்** (10 ஓவர்களில் 91 ஓட்டங்கள்) அவுஸ்திரேலியாவுக்கு எதிராக 2011 இல் சிட்னி

**ஜேம்ஸ் ஆண்டர்சன்** (9.5 ஓவரில் 91 ஓட்டங்கள்) இந்தியாவுக்கு எதிராக 2011 இல் பெங்களூரு

**லியாம் பிளங்கட்** (10 ஓவர்களில் 91ஓட்டங்கள்) இந்தியாவுக்கு எதிராக 2017 கட்டாக்

**கிறிஸ் வோக்ஸ்** (10 ஓவர்களில் 91 ஓட்டங்கள்) மேற்கு இந்தியாவுக்கு எதிராக 2019 செயின்ட் ஜார்ஜ்



இப் பத்திரிகையானது பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள Needa media corporation (PVT) LTD இனால் 04.12.2023 அன்று வெளியிடப்பட்டது.